சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு

திவ்வியகவி - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அருளிச்செய்த

# திருவரங்கக் கலம்பகம்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies



"அறிவுச் செல்வங்கள் அனைத்தையும்
தமிழுக்குக் கொண்டுவர வேண்டும்.
இனிவரும் நூற்றாண்டுகளுக்கும்
அருந்தமிழை ஆற்றல் படுத்த வேண்டும்"

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித் தலைவி
**அம்மா** அவர்கள்

திவ்வியகவி - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அருளிச்செய்த

# திருவரங்கக் கலம்பகம்

சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு
பதிப்பாசிரியர்


முனைவர் **கோ.விசயராகவன்**

எம்.ஏ.,எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்.,பிஎச்.டி.

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.



**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

# நூல் விவரக் குறிப்பு

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : திருவரங்கக் கலம்பகம் |
| நூல் ஆசிரியர் | : திவ்வியகவி - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் |
| வெளியீட்டாளரும் பதிப்புரிமையும் | : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை - 600 113. |
| தொலைபேசி எண் | : 044 - 22542992 |
| வெளியீட்டு எண் | : 884 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : 2015 : முதற்பதிப்பு |
| பயன்படுத்திய தாள் | : 16 கிகி டி.என்.பி.எல்.வெள்ளை |
| நூலின் அளவு | : 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : 11 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : 48 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : 1200 |
| விலை | : ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) |
| ISBN | : 978-93-85165-39-9 |
| அச்சகம் | : ராஜ் எண்டர்பிரைஸஸ்<br>திருவல்லிக்கேணி<br>சென்னை - 600 005. |

முனைவர் கோ.விசயராகவன் எம்.ஏ., எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்.,பி எச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

பழங்கால அரியநூல்களையும் சுவடிகளையும் பாதுகாக்கும் வகையில் 2014ஆம் ஆண்டு நிறுவனத்தில் 34 இலட்சம் மதிப்பீட்டில் சுவடிகள் பாதுகாப்பு மய்யம் மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. அவ்வகையில் நாடெங்கினும் உள்ள அரிய நூல்களை, சுவடிகளைத் திரட்டும் பணி தொடங்கப்பட்டு, கண்டறியப்பட்டுள்ள நூல்களைத் தமிழ்த்தாய் 67 - பெருவிழா, பிப்ரவரி 2015இல் வெளியிடும் திட்டத்தின் கீழ், தாரண ஆண்டு சித்திரைத் திங்கள் வெளிவந்துள்ள இந்நூல் இப்பொழுது மீட்டுருவாக்கம் செய்யப்பெற்று வெளியிடப்படுகிறது.

தமிழில் தோன்றி வளர்ந்துள்ள சிற்றிலங்கியங்களின் வகையைத் 96 எனச் சொன்னாலும் அவற்றையும் மிஞ்சி மிகப்பலவாக விரிந்துள்ளன. அவற்றுள் ஒன்றுதான் கலம்பகம் என்னும் சிற்றிலக்கியம். இவ்விலக்கியம் 18 உறுப்புகளைக் கொண்டது என்பர். எனினும் பலவகை யாப்பு உறுப்புகளும் கலந்து வருமாறு பலவகைப்பாடல்களும் இணைந்த சிற்றிலக்கிய வகையாக அமைந்துள்ளது. அத்தகைய கலம்பங்களுள் ஒன்றாக அமைந்திருப்பது கோயிற் கலம்பகம் என்றழைக்கப்படுகின்ற திருவரங்கக் கலகம்பகம் ஆகும். திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற அரங்கனது பெருமையையும் அருளிச் செயல்களையும் உரைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. காப்பு உட்பட 101 செய்யுள்களை உடையது.

வழிவழி வந்த வைணவ நெறிகளால் வாழ்ந்து சிறந்த அழகிய மணவாளதாசர் என்கிற அருளாளர் இந்நூலை எழுதியுள்ளார். தனியனை விடுத்து 101 பாடல்களில் அரங்கன் அருட்செயலைப் பாடி தமது பல்வகை யாப்புப் புலமையையும் இலக்கிய வளமையையும். வைணவ நெறிமுறைகளையும் வெளிப்படுத்தி இருப்பதைப் படிப்போர் உணர்வர். கிடைத்தற்கரிய இந்நூல் ஒளியச்சு மூலம் இப்பொழுது புத்துயிர் பெற்றுள்ளது.

தமிழறிஞர்களின் தமிழ்த் தொண்டினை எப்போதும் பாராட்டுவதில் முதன்மையானவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ் மீதும் தமிழர் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும்வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றோம்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு கே.சி. வீரமணி அவர்களுக்கு நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் என் நன்றி.

**இயக்குநர்**

கோயிற்கலம்பகம்

என்னும்

# திருவரங்கக்கலம்பகம்

மூலபாடம்.

அழகியமணவாளதாசர்

என்கிற

## திவ்வியகவி - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

அருளிச்செய்தது.

இஃது

பிழையறப் பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:
ஸ்ரீ - புஷ்பரதசெட்டியாரால்
கலாரத்நாகரம் என்னும்
அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

தாரண ஹு சித்திரை மீ

ஸ்ரீ

# திருவரங்கக்கலம்பகம்.

தனியன்கள் - நேரிசைவெண்பா.

ஆழ்வார்முன்பின்னவர்க்கு மாமறைதந்தார்தமிழால்
வாழ்வார்மணவாளர் மாண்பவருட் - டாழ்வாரு
மெம்போலியர்க்கு மிரங்கியரங்கக்கலம்ப
கம்போதநல்கவைத்தார் காண்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோ
க்கு நடைநோக்குந் துறையினோக்கோ, டென்னோக்
குங் காணவிலக் கியமாவ தன்றியிதி லீடுபட்டோர்,
நன்னோக்கும் புத்தியும் பத்தியும்பெறுவர் முத்தியு
ண்டா நானென்சொல்கேன், பன்னோக்க மணவா
ளர் பகாரங்கக் கலம்பகத்தைப் பாரீர்பாரீர்

காப்பு - கட்டளைக்கலித்துறைகள்.

வேதந்தொகுத்துத்தமிழ்ப்பாடல்செய்தவிமலன்
பொய்கை, பூதன்மயிலையர்கோன்புகழ்ச்சேரன்புத்
தூரன்றொண்டர், பாதந்தருந்துகண்மாமழிசைக்கு
மன்பாணன்மங்கை, நாதன்மதுரகவிகோதைபாதங்
க ணண்ணுதுமே. (க)

மறைப்பாற்கடலைத்திருநாவின்மந்தரத்தாற்கடை
ந்து, துறைப்பாற்படுத்தித்தமிழாயிரத்தின்சுவைய
மிர்தங், கறைப்பாம்பணைப்பள்ளி யானன்பரீட்டங்
களித்தருந்த, நிறைப்பான்கழலன்றிச்சன்மவிடாய்
க்கு நிழலில்லையே. (உ)

பிடிக்கும்பரசமயக்குலவேழம்பிளிறவெகுண்
டிடிக்குங்குரற்சிங்கவேறனையானெழுபாருமுய்யப்
படிக்கும்புகழெம்மிராமாநுசமுனிபல்குணமும்
வடிக்குங்கருத்தினர்க்கேதிருமாமணிமண்டபமே.

வானிட்டகீர்த்திவளர்கூரத்தாழ்வான்மகிழவந்த
தேனிட்டதார்நம்பெருமாள்குமாரர்சிவனையயன்
றானிட்டசாபந்துடைத்தாளரங்கர்சங்காழிபுய
நானிட்டவென்றருள்பட்டர்பொற்றாள்கதிநந்தமக்
[கே.

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

இவை-எட்டடித்தரவுகள். (௨)

சீர்பூத்தசெழுங்கமலத்திருத்தவிசின்வீற்றிருக்கு
நீர்பூத்ததிருமகளுநிலமகளுமடிவருடச்
சிறைப்பறவைபுறங்காப்பச்சேனையர்கோன்பணிகேட்ப
நறைப்படலைத்துழாய்மார்பினுயிறுபோன்மணிவிளங்க
வரியதானவர்க்கடிந்தவைம்படையும்புடைதயங்கக்
கரியமால்வரைமுளரிக்காடீன்றுகிடந்தாங்குப்
பாயிரநான்மறைபரவப்பாற்கடலுட்பருமணிச்சூட்
டாயிரவாய்ப்பாம்பணைமேலறிதுயிலினிதமர்ந்தோய்.

மன்னகந்துயர்நீங்கவானகந்தொழுதேத்தக்
கன்னகன்சோணாட்டுக்காவிரிவாய்ப்புளினத்துப்
பம்புகதிர்விசும்பிரவிபசும்புரவிவழிவிலங்கு
செம்பொன்மதிலேழுடுத்ததிருவரங்கப்பெருங்கோயி
லாணிப்பொற்றகடுரிஞ்சுமணிக்கதவநீள்வாயின்
மாணிக்கவெயில்பரப்பும்வயிரமணிவிமானத்துன்
மின்னிலங்குதொடிவலயவியன்வலக்கைகீழ்கொடுத்துத்
தென்னிலங்கைத்திசைநோக்கித்திருநயனத்துயில்வோய்கேள்

இவை - ஈரடித்தாழிசைகள். (௬)

தேவராய்த்தேவர்க்குந்தெரியாதவொளியுருவாய்
மூவராய்மூவர்க்குமுதல்வனாய்நின்றோய்நீ (௧)

போற்றுவார் போற்றுவதுன் புகழ்ப்பொருளே யாதலினால், வேற்றுவா சகமடியேன் விளம்புமா றறியேனால். (௨)

பணித்தடங்கா இமையவர்க்கும் பங்கயத்தோன் முதலோர்க்கும், பணித்தடங்காப் புகழடியேன் பணித்தடங்கற் பாலதோ. (௩)

யாங்கடவுளென்றிருக்குமெவ்வுலகிற்கடவுளர்க்கு மாங்கடவுணீயென்றாலஃதுனக்குவியப்பாமோ. ()

அனைத்துலகு மனைத்துயிரு மமைத்தளித்துத் துடைப்பதுநீ, நினைத்தவினை யாட்டென்றா னின்பெருமைக் களவாமோ. (௫)

கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையு, மொருதனி நாயகமென்றா லுன்புகழ்க்கு வரம்பாமோ. (௬)

இவை - ஈரடி அராகங்கள். (௪)

உருவென வருவென வுளனென விலனென
வருமறை யிறுதியு மறிவரு நிலைமையை
இவரிவ ரிறையவ ரெனமன வுறுதியோ
டவரவர் தொழவரு சமயமு மருளினை
கடுவளி கனல்புனல் ககனமோ டகலிட
முடுபதி கதிரவ னுருவமு மருளினை
கடிமல ரடியிணை கருதினர் பெறுகென
வடிநடு முடிவற வருள்பர கதியினை.

இவை பெயர்த்தும்-ஈரடித்தாழிசைகள். (௪)

ஒருநாலுமுகத்தவனோ டுலகீன்றவென்பாதன்
திருநாபிமலர்ந்ததல்லாற் றிருவுளத்திலுணராயால்
மேருகிரியுடலவுணன் மிடல்கெடுத்தாயென்பாதன்
கூருகிரோயறிந்ததல்லாற் கோவேநீயறியாயால்

பன்றியாய்ப்படியெடுத்த பாழியாயென்பரது
வென்றியாருனதெயிற்றின் மென்றுகள்போன்றிருந்ததால்

அண்டமெலாமுண்டையென்பா ரறியாதாராங்கவைநீ
யுண்டருளுங்காலத்திலொருதுற்றுக்காற்றுவால்.

இவை-நாற்சீர் ஓரடி அம்போதரங்கம். (௨)

நஞ்சமுமமுதமுநரகும்வீடுமாய்
வஞ்சமுஞானமுமறப்புமாயினை

இருவினைப்பகுதியுமின்பதுன்பமும்
கருணையும்வெகுளியுங்கருத்துமாயினை.

இவை-மூச்சீர் ஓரடி அம்போதரங்கம். (௪)

அலைகடல்வயிறுகலக்கினை
யவுணர்மதுகையடக்கினை
மலைகடகளிறுவதைத்தனை
மலைதலைகவிழவெடுத்தனை.

இவை-இருசீர் ஓரடி அம்போதரங்கம். (அ)

மண்ணைவிண்டனை
வெண்ணெயுண்டனை
மருதிடந்தனை
யெருதடர்ந்தனை
யுண்ணிறைந்தனை
யெண்ணிறந்தனை
யொருமையாயினை
பெருமைமேயினை
எனவாங்கு

தனிச்சொல்.

பதின்மூன்கடிநிலமண்டில ஆசிரியச்சுரிதகம்.

மலர்தலையுலகத்துப் புலமைசான்ற
பதின்மரும்பணித்த பாடலோதையொடு

மூதுமறைகறங்க முரசமார்ப்ப
வலம்புரிபிளிறும் பொலம்புரிகோயி
லாழியஞ்செல்வ வாதியம்பரம
வாழிவாழி மாயோய்வாழி
நெடியோய்வாழி நின்மாட்டொன்றே
யடியேன்வேண்டுவ தஃதுநீமறுக்கேல்
பூவருமயன்முதல் யாவருமறியா
மூவுலகளந்தநின் சேவடிவாழ்த்தித்
தொழுதகைத்தொண்டர்தந் தொண்டருட்சேர்க்
கெழுவகைத்தோற்றத் தின்னும்பிறப்பி [கா
னென்பொழியாக்கையுட் சேர்ப்பினுமவர்பா
லன்பொழியாமை யருண்மதியெனக்கே. (க)

நேரிசைவெண்பா.

எனக்கேதிருவரங்கனேபிரானெம்மான்
றனக்கேயடிமைதமியேன் - புனக்கேழ்
மருத்துளவோன்மேலன்றிமற்றொருவர் மேலென்
கருத்துளவோவாராயுங்கால். (உ)

கட்டளைக்கலித்துறை.

காலாயிரமுடியாயிரமாயிரங்கைபரப்பி, மேலாயி
ரந்தலைநாகங்கவிப்பவின்பூத்தகஞ்சம், போலாயிர
ங்கண்வளரும்பிரான்பொன்னரங்கனென்றே,மாலா
யிரங்கவல்லார்க்கெய்தலாந்திருவைகுந்தமே. (௩)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வைகலந்தமூவிலைவேலிசற்கும்வாசவற்கும்வாசப்
பூமேன், மெய்கலந்தநால்வேதவிரிஞ்சனுக்குமேலா
யவீற்றிருப்பர்மாதோ, பைகலந்தபாம்பணைமேற்றி
ருவரங்கப்பெருநகருட்பள்ளிகொள்ளும்,கைகலந்த
நேமியான்றிருநாமத்தொருநாமங்கற்றோர்தாமே. ()

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கற்றொனினும்பதினாலுலகுங் கண்டானெனினுந்
தண்டாமிகுபம், மற்றொனினுந்திருமாலடியா ரல்
லாதவர்வீடில்லாதவரோ, பொற்றாமரையாள்கணவ
ன்றுயிலும் பொற்கோயிலையேபுகழ்வார்பணிவார்,
மற்றொனினும்பெற்றாவரோ வானோர்திருமாமணி
மண்டபமே. (௫)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியச் சந்தவிருத்தம்.

மண்டலமும்விண்டலமுநின்றவடகுன்றமும்வளை
ந்தமலையுங்கடலுமூ, தண்டமு மகண்டமுமயின்ற
வர்துயின்றரு ளரும்பதிவிரும்பிவினவிற், கொண்
டல்குமுறுங்குடகிழிந்துமத குந்தியகில்கொண்டுறு
ைரமண்டிவருநீர், தெண்டிரைதொறுந்தரளமுங்க
னகமுஞ்சிதறுதென்றிருவரங்கநகரே (௬)

புயவகுப்பு - ஆசிரியவண்ண விருத்தம்.

(முதலடி)

நகுகதிர்வழங்கு நகடுபடுசெம்பொ
னவமணிகுயின்ற தொடியணியணிந்து
ககனவிலிடுநீல வெற்பொத்திருந்தன,

நறியபுதுமன்ற நிசைமுழுதுமண்ட
நறவுகுதிகொண்ட துளவணியலங்கன்
மதுகரமொருகோடி சுற்றப்புனைந்தன,

நளினமடமங்கை குவலயமடந்தை
சனகனதணங்கு பொதுவர்மகளென்றிவ்
வனிதையர்தனபார மொத்தக்குழைந்தன,

நதிபதிசுழன்று கதறுமைசிந்த
வரவகடுரிஞ்சி யலறவலமந்து
வடவரையுடறேய நட்டுக்கடைந்தன;

(இரண்டாமடி)

இகலியிருகுன்றி யிருசுடரொழுந்து
பொருவதெனவிம்ப மதிமுகமிலங்கு
மிருகுழையிருபாடலைப்பச்சிறந்தன,

இணையறவிமிர்ந்து வலியொடுதிரண்டு
புகழொடுபராந்து புழுகொடுமளைந்து
கலவையினணிசேறு துற்றுக்கமழ்ந்தன,

எதிரொருவரின்றி யகிலவுலகுந்த
னடிதொழவிருந்த விரணியன்மடங்க
முரணியவன்மார்ப மெற்றிப்பிளந்தன,

எறிகடல்கலங்கி முறையிடவெகுண்டு
நிசிசரரிலங்கை யரசொடுமலங்க
வொருசிலையிருகால் வளைத்துச்சிவந்தன;

(மூன்றாமடி)

மிகுகளவினின்ற விளவுகனிசிந்தி
மடியவிடுகன்று குணிலெனவெறிந்து
பறவையினகல்வாய் கிழித்துப்பகிர்ந்தன,

வெறிபடுகுருந்தை முறிபடவடர்ந்து
குடநடமகிழ்ந்து குரவைகள்பிணைந்து
பொருதொழிலெருதேழு செற்றுத்தணிந்தன,

வெடிபடமுழங்கி யெழுமுகிலுமண்ட
ரொடுநிரைதியங்க வெறிதிவலைகண்டு
தடவரைகுடையா வெடுத்துச்சுமந்தன,

விழிவடவைபொங்க வெதிர்பொரநடந்த
களிறுளம்வெருண்டு பிளிறிடமுனிந்த
புகர்முகவிருகோடு பற்றிப்பிடுங்கின;

(நான்காமடி)

அகலிடமுழும்ப ருலகமுநடுங்கி
யபயமடியெங்க ளபயமெனவந்து
விழுதொறுமிடையூ றகற்றிப்புரந்தன,

அருகுறவிளங்கு மெறிதிகிரிசங்கம்
வெயிலொருமருங்கு நிலவொருமருங்கு
மெதிரெதிர்கதிர்வீச விட்டுப்பொலிந்தன,

அருமறைதுணிந்தபொருண்முடிவையின்சொ
லமுதொழுகுகின்ற தமிழினில்விளம்பி
யருளியசடகோபர் சொற்பெற்றுயர்ந்தன,

அரவணைவிரும்பி யறிதுயிலமர்ந்த
வணிதிருவரங்கர் மணிதிகழ்முகுந்த
ரழகியமணவாளர் கொற்றப்புயங்களே. (எ)

நேரிசைவெண்பா.

புயநான்குடையானைப் பொன்னரங்கத்தானை
யயனுந்திருவுந்தியானை—வியனும்
பாகதிக்குக்காதலாய்ப்பாடினேன்கண்டீர்
நரகதிக்குக்காணுமனுன். (அ)

கட்டளைக்கலித்துறை.

நானந்தலைவருந்தநாடெய்திவாழிலென் ஞாலத்த
ன்றி, யீனந்தவாதவிரயத்துவீழிலென் யானைடைந்
தேன், கோனந்தன்மைந்தனைநான்முகன்றந்தையை
க்கோயிலச்சு, தானந்தனையெனக்காராவமுதை யர
ங்கனையே. (கூ)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அரவினடித்தானு முரவிலொடித்தானும்
அடவிகடந்தானும் புடவியிடந்தானும்

குரவைபிணைத்தானும் பரவையணைத்தானும்
கோசலைபெற்றானும் வீசலையுற்றானும்
முரனையறுத்தானுங் கரனையொறுத்தானும்
முத்தியளித்தானு மத்திவிளித்தானும்
பரமபதத்தானுஞ் சரமவிதத்தானும்
பாயல்வடத்தானுங் கோயிலிடத்தானே. (௰)

கட்டளைக்கலித்துறை.

தானேதனக்கொத்த தாட்டாமரைக்குச் சரண்புகுந்தா, ளானேனினியுன்னரு ளறியேனெனதாருயிரோ, தேனேயென்றீவினைக்கோர்மருந்தே பெருந்தேவர்க்கெல்லாங், கோனேயரங்கத் தரவணைமேற்பள்ளிகொண்டவனே. (௧௧)

மேகவிடுதூது - நேரிசைவெண்பா.

கொண்டல்கா ளும்மைக் குறித்தே தொழுகின்றே, னண்டர்காணு வரங்கத் தம்மானைக்—கண்டு,
மனத்துளவத் தைப்படுமென் மையலெல்லாஞ்சொல்லிப், புனத்துளவத் தைக்கொணரீர் போய். (௧௨)

கலிவிருத்தம்;

போயவனியிற்சிலபுறச்சமயநாடும்
பேயறிவைவிட்டெழுபிறப்பையுமறுப்பீ
ராயனையனந்தனையனந்தசயனத்தெம்
மாயனையரங்கனைவணங்கிமருவீரோ. (௧௩)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மருவுதந்தையுங் குருவுமெந்தையு மருள்கெடுப்பதுமருள்கொடுப்பது, முருகுநெஞ்சமும் பெருகுதஞ்சமு முரியஞானமும் பெரியவானமுந், திருவரங்கனிருவரங்கனர்செங்கண்மாயனு மொங்களாயனு,

ரருண்முகுந்தனர் திருவைகுந்தனு ரமலநாதனர் கமலபாதமே. (கச)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாதியாயழுகியகால்கையரோனும்
பழிதொழிலுமிழிகுலமும்படைத்தாரோனும்
ஆதியாயரவணையாயென்பராகி
லவரன்றேயாம்வணங்குமடிகளாவார்
சாதியாலொழுக்கத்தான்மிக்கோரோனுஞ்
சதுர்மறையால்வேள்வியாற்றக்கோரோனும்
போதினன்முகம்பணியப்பள்ளிகொள்வான்
பொன்னரங்கம்போற்றுதார்புலையர்தாமே. (கரு)

கட்டளைக்கலித்துறை.

புலையாம்பிறவி பிறந்தென்செய்தோம் பொன்னி பொன்கொழிக்கு, மலையார்திருவரங்கத் தெம்பிரானை மதன்னையொடுங், தொலையாதகானங்கடந்தவந்நா ட்டடந்தோறும்புல்லாய்ச், சிலையாய்க்கிடந்திலமே நெஞ்சமேகழநீண்டுகைக்கே. (கசு)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நீண்டாவழும்புஞ் செந்நீருஞ்சீயுசரம்புஞ் செறிதசையும், வேண்டாநாற்றமிகுமுடலைவீணை சுமந்துமெலிவேனே, நீண்டாய் தூண்டாவிளக்கொளியாய் நின்றுயொன்றுயடியாரை, யாண்டாய்காண்டாவனமெரித்தவரய்காவடியேற் கிரங்காயே. (கஎ)

தவம் - கலிநிலைத்துறை.

காயிலைதின்றுங் கானிலுறைந்துங் கதிதேடித்
தீயிடைநின்றும் பூவலம்வந்துந் திரிவீர்கா
டாயிலுமன்பன் பூமகணண்பன் றடநாகப்
பாயன்முகுந்தன் கோயிலரங்கம் பணிவீரே. ()

இதுவுமது - கட்டளைக்கலித்துறை.

வீரரங்காகிய வைவளாமாற்றி விடவரவின், போ
ரரங்காகடித்தபொற்றாள்பற்றிப் பொன்னிநன்னீர்
ச், சீரரங்காநின்றெருழும்பனென்றே சிந்தைசெய்யி
லது, கூரரங்கர்ணெஞ்சமேவஞ்சமாயக்கொடுவினை
க்கே. (கசு)

நேரிசைவெண்பா.

கேசவனையேசெவிகள்கேட்க திருவரங்கத்
தீசனையேசென்னி யிறைஞ்சிடுக—நேசமுடன் [ம்பூ
கண்ணனையேகாண்கவிரு கண்ணிணர்கொள்காயா
வண்ணனையேவாழ்த்துகவென்வாய். (உ௦)

இரங்கல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.

வாயினிரங்கினை யாரமெறிந்தனை வால்வளைசிந்தி
னைதன், பாயலையுந்தினை மாலையடைந்தனை பாரிலு
றங்கிலையாற், கோயிலரங்கனைமாகனகந்திகழ் கோக
னகம்பொலியு, மாயிழைநண்பனை நீயும்விரும்பினை
யாகுநெடுங்கடலே. (உக)

இதுவுமது - கலிநிலை வண்ணத்துறை.

கடல்வழிவிடநிசரர்பொடிபடவிருகண்சீறி
வடகயிலையிலெழுவிடைதழுவியதுமறந்தாரோ
வடலாவமளியிலறிதுயிலமருமரங்கேச
ரிடர்கெடவருகிலர்முருகலர்துளவுமிரங்காரே. ()

நேரிசைவெண்பா.

இரங்கத்தனித்தனியேயெய்துகின்றதுன்பத்
தரங்கத்தையேதாற்றடுப்பீ—ரரங்கர்க்குக்
கஞ்சந்திருப்பாதங்கார்மேனியென்றவர்பா
னெஞ்சந்திருப்பாதநீர். (உங)

இரங்கல் - தாழிசை.

நீரிருக்கமட மங்கைமீர்கிளிக டாமிருக்கமது கர மெலா, நிறைந்திருக்கமட வன்னமுன்னனிளை யா யிருக்கவுளை யாமல்யா, ஞரிருக்கிலுமென் னெஞ்ச மல்லதொரு வஞ்சமற்றதுணை யில்லையென், ருதாத் திஞெடு தூதுவிட்டபிழை யாரிடத்துரைசெய் தா றுவேன், சீரிருக்குமறை முடிவுதேடரிய திருவரங் களை வணங்கியே, திருத்துழாய்தரில் விரும்பியே கொடு திரும்பியேவருத லின்றியே, வாரிருக்குமுலை மலர்மடந்தையுறை மார்பிலேபெரிய தோளிலே, மயங்கியின்புற முயங்கியென்னையு மறந்துதன்னையு மறந்ததே. (உச)

இதுவுமது - நேரிசைவெண்பா.

மறக்குமோகாவின்மதுவருந்தியப்பாற்
பறக்குமோசங்கிமுன்பாமோ—சிறக்கத்
தருவரங்கள்கேட்குமோதாழ்க்குமோநெஞ்சே
திருவரங்கர்பாற்போனதேன். (உரு)

அம்மானை - மடக்குக்கலித்தாழிசை.

தேனமருஞ்சோலைத்திருவரங்கரெப்பொருளு
மானவர்தாமாண்பெண்ணலியலர்காணம்மானை
ஆனவர்தாமாண்பெண்ணலியலரோயாமாகிற்
சானகியைக்கொள்வரோதாரமாயம்மானை
தாரமாய்க்கொண்டதுமோர்சாபத்தாலம்மானை. ()

இரங்கல் - மடக்குத்தாழிசை.

மானையெய்தவரின்னமென்மட மானையெய்திலர் கேமியான், மாலைதந்தவர்பைந்துழாய்மது மாலைதந் திலரிந்திரன், சோனைமாரிவிலக்கிவிட்டவர் சொரி கண்மாரி விலக்கிலார், சுரர்களுக்கமுதங் கொடுத்த வர் சோதிவாயமுதங்கொடார், தானையைவர் கொ

டிக்களித்தவர் தானைகொண்டதளிக்கிலார், சங்கர
ற்கிரவைத்தடுத்தவர் தையலுக்கிரவைத்தடார்; ரா
னைமுன் வருமன்புளார்முலை யானைமுன்வரு மன்பி
லா, ரணியரங்கர் நடத்துநீதிய நீதியாகவிருந்ததே.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருளினும்வெளியினுமருளினுந்தெருளினு
மின்பமேயடையினுந்துன்பமேமிடையினு
மொருவர்முன்புகழினுமிருவர்பின்பிகழினு
மூனிறந்தழியினும்யான்மறந்தொழிவனோ
சுருதிநின்றோலிடுங்காதலங்காலொடுந்
துவளுநூன்மார்வமும்பவளவாய்மூரலுந்
திருவரங்கேசர்தஞ்சுருள்கருங்கேசமுஞ்
செய்யநீண்முடியுமத்துய்யசேவடியுமே. (௨௮)

நேரிசைவெண்பா.

சேவடியான்மூவடிமண்டென்னரங்கத்தம்மானீ
மாவலிபால்வாங்கியநாண்மண்ணுலகோ-மூவுலகும்
வீசுங்காலோவலியவெவ்வினையேனெஞ்சமோ
பேசுங்காலேதோபெரிது. (௨௯)

நாரைவிடுதூது - கட்டளைக்கலித்துறை.

பெருவரங்கேசவனல்லாதருள்செய்யும் பேரிலை
வே, வொருவரங்கேசற்றுமோதாரொன்காதலையோ
டியெங்கும், கருவரங்கேசவிக்கத்திரிவோர்க்குக்கரு
ணைசெய்யுந், திருவரங்கேசர்க்கு நீசொல்லல்வேண்
டுஞ் செழுங்குருகே. (௩0)

இரங்கல் - தாழிசை.

குருகுறங்குகானலேகருநிறங்கொள்பானலே
கொடியிருண்டஞாழலேநெடியகண்டனீழலே

பொருதரங்கவேலையேநிருதரங்கமாலையே
போதயின்றகம்புளேயேதையின்றியம்புகேன்
திருவரங்கரிணையிலாவொருபுயங்கவணையிலே
திகழ்வலக்கைகீழதாழுகிழ்மலர்க்கண்வளர்வதோர்
கருணைநம்புவதனமுமருணவிம்பவதாமுங்
காவிகொண்டமேனியுமாவிகொண்டுபோனவே.

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

போனகம்பதிணுஞ்புவனந்திருப்பள்ளிபொறியரவணைப்பாற்கடல், பூமடந்தையுநிலமடந்தையுந்தேவியர்புராதனமறைக்குமெட்டா, வானகம்பேரின்பமுடன்வீற்றிருக்குமிடம் வாகனம்வயினதேயன், மலர்வந்தநான்முகன் றிருமைந்தனவன்மைந்தன் மதிசூடிவாசவன்முதற், றேனகுந்தொடைமௌலிமுப்பத்துமுக்கோடி தேவருனதேவல்செய்வோர், திங்களும்பரிதியுஞ்சங்கமுந்திகிரியுந் திரிவனவுநிற்பனவுமா, மேனைமன்னுயிர்முழுதும் விளையாடநீவகுத்திட்டபலமாயையதனு, லெழிலரங்கந்துயிலுமெம்பிரானின்பெருமை யாவரோவாழ்த்துவாரே. (௩௨)

இரங்கல் - இதுவுமது.

வாழுமவுலித்துழாய்மணமு மகரக்குழைதோய்விழியருளு, மலர்ந்தபவளத்திருநகையு மார்பிலணிந்தமணிச்சுடருந், தாழுமுளரித்திருநாபித்தடத்துளடங்கு மனைத்துயிருஞ், சரணகமலத்துமைகேள்வன் சடையிற்புனலுங்காணு, லாழமுடையகருங்கடலினகடுகிழியச்சுழித்தோடி, யலைக்குங்குடகாவிரிநாப்பணைவாயரவிற்றுயிலமுதை, யேழுபிறப்பிலடியவரையெழுதாப்பெரியபெருமானை, யெழுதவரியபெருமானென்றெண்ணுதெழுதியிருந்தேனே

இதுவுமது-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருங்கும்மத்தோ ளரங்கேசர்முன்னா ளிலங்கா புரங்கா வலன்காலினால்வீழ், கருங்குன்றுபோன் ம ண்முகங்குத்திவீழக் கண்டாரொனக்கின்று தண்டா ரளித்தால், மருங்கெங்கும்வம்போது வார்வாயடங் கும் வாடைக்குநிலமங்கை யாடைக்குநோகேன், நெருங்குந்தனஞ் சந்தனம்பூசலாகும் நீளாதிராமை யன் மீளாதிராதே. (௩௪)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தேடுகின்றனை யைம்பொறிகளுக் கிரைதேடியுங் கிடையாமல், வாடுகின்றனை வீடுசென்றென் றினி மருவுவை மடநெஞ்சே, ஆடுகின்றிலை யழுகிலைதொ ழுகிலை யரங்கனைக் கரங்கூப்பிப், பாடுகின்றிலை நினை கிலைபதின்மர் தம்பாடலின் படியாயே. (௩௫)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆயினைமனையைச் சேயினைப்பிதாவை யனத்தினை த்தனைத்தினை விரும்பும், பேயினைமறந்து நோயினை மூப்பைப் பிறப்பினையிறப்பினைத் துடைப்பீ, ராப னைமுளரி வாயனையெங்க ளமலனைக்கமலனைப் பயந் த, தாயனைநெடிய மாயனைவடபாற் றரங்கனையரங் கனைத் தொழுமே. (௩௬)

மடக்குக் கட்டளை மண்டலக்கலிப்பா.

தொழப்பெறுதந்தவாரணத்தந்தமே
தொட்டிறுத்ததும்வாரணத்தந்தமே
வழுத்துதாண்முன்புவனங்கடந்ததே
மலர்ந்தவுந்திபுவனங்கடந்ததே
ஒழித்ததுங்குழைச்சங்கரன்சாபமே
ஒசித்ததுங்குழைச்சங்கரன்சாபமே

அழித்ததும்பொருதானவரங்கமே
அரிதனூரினிதானவரங்கமே. (கஎ)

நேரிசைஆசிரியப்பா-உயிர்வருக்கமோனை.

அரங்கமாளிகைக் கருங்கடல்வண்ணனை
ஆலிமாமுகிலை வாலிகாலனை
இந்தளூருறை யெந்தையெம்மானை
ஈசனான்முகன் வாசவன்றலைவனை
உள்ளுவாருள்ளத் துள்ளுறைசோதியை
ஊரகநின்றரு ணீரகத்தடிகளை
எவ்வுண்மாயனைத் தெய்வநாயகனை
ஏர்மலிசிகரத்து நீர்மலையாதியை
ஐவாயரவி லறிதுயிலமலனை
ஒருகான்மொழியினு மொழிகுவைநெஞ்சே
ஓதநீர்ஞாலத் துழலும்
ஔவியபிறப்பி லழுந்திவாடுவதே. (கஅ)

இரங்கல் - தாழிசை.

வாடியோடவனசமன்னவிருகண்வெள்ளமருவிபோன்
மருவியோடமதனன்வாளியுருவியோடவாடையூ
டாடியோடவுன்றிலோசைசெவியிலோடவண்டுமா
யாசையோடுமெங்கள்பேதையாவியோடனீதியோ
மோடியோடவ்விவெப்புமங்கியோடவைங்கரன்
முடுகியோடமுருகனோடமுக்கணீசன்மக்களைத்
தேடியோடவாணனுயிரம்புயங்கள்குருதிநீர்
சிந்தியோடநேமிதொட்டதிருவரங்கராசனே. (கக)

கலிச்சந்த விருத்தம்.

சருகருந்தியைம்பொறிவருந்தருந் தவர்களண்டர்
குஞ்சரமுகன்குகன், பரிதிசந்திரன் சிவனயன்புரந்
தரனிரந்தரம் பரவுமெந்தையூர், குருகைதஞ்சை
தென்கணபுரங்குறுங் குடிகுடந்தைவண்டு வரை

யிந்தனூர், திருவைகுந்தமஞ்சனசிலம்பயிந் திரபுர ஞ்செழுந் திருவரங்கமே. (ச0)

மடக்குக் கொச்சகக்கலிப்பா.

திருவரங்கந் திருக்கோயில் சேர்ந்துமது திருக் கோயில், தருவவொன்றும் வைகுந்தந் தயங்கொளி சேர்வைகுந்தம், ஒருமருங்கி னந்துடையா ரொழிந் தொர்சன னந்துடையார், மருவமறந் திருப்பீரோ வ ணங்கமறந் திருப்பீரோ. (சக)

சித்து - கட்டளை நிலைக்கலிப்பா.

திருப்பொற்பாவைக்குக்கஞ்சம்பொன்னுக்கிய
சித்தரோஞ்சுத்தக்காயாமலவொன
உருப்பொற்பானதிருவரங்கேசனு
ரூரகத்துநின்றூர்சென்றிறைஞ்சினேம்
இருப்புப்பாடகங்காட்டினர்யாமவர்க்
கிரும்பையாடகமாக்கினமீயத்தை
நருக்கிவெள்ளியதாகவுருக்குவோம்
நமதுவித்தைக்கமுதேயருமையே. (சஉ)

இதுவுமது - கட்டளைக்கலித்துறை.

அரும்பித்தளையவிழ் நாண்மாலைமார்ப னரங்க னெங்கள், பெரும்பித்தளையும் பிறப்பறுத்தாண்ட பிரான்சித்தரோம், தரும்பித்தளையுந் தராவும்பொ ன்னாக்கித் தருவெமப்பா, திரும்பித்தளையினு நெய் பாலமுதினுஞ் சிந்தனையே. (சங)

நேரிசைவெண்பா.

சிந்திக்கத்தித்திக்குஞ்செவ்வாய்துவர்த்துப்பாம்
புந்திக்குளேயின்புளிமேவு—நந்தங்
கருவரங்கங்கைத்தழலுங்காவிரியினூடே
திருவரங்கத்தேவளருந்தேன். (சச)

கட்டளைக்கலித்துறை.

தேனார்ந்துசோலை யரங்கேசர்சேவடி மேல்விசய
ன், தானந்தநாளையிற் சாத்தியமாலையுந் தாள்விளக்
கும், வானந்தருங்கங்கை நன்னீருஞ்சென்னியில்
வைக்கப்பெற்ற, ஆனந்தந்தானல்ல வோமுக்கணன்
மன்று ளாடுவதே. (சரு)

இரங்கல் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆடும்படநா கணைமேலணையு மமலன்கமலத் தவ
னுஞ்சிவனும், நாடுந்திருமா நுயில்கோ யிலின்வாய்
நறைவார்பொழிலூ டுறைவாரளகக், காடுக்குழை
யைச் சாடுங்குவளைக் கண்ணுங்குதலைப் பண்ணுங்க
ரியின், கோடுந்தாளத் தே[illegible]டும்புருவக் கோதண்ட
முமே மூதண்டமுமே. (சசு)

கைக்கிளை-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.

அண்டமுழு துண்டவ ருமிழ்ந்தவ ரிடந்தவ ரள
ந்தவர் வளர்ந்தருளுமா, சண்டபண வைந்தலை யன
ந்தசய னந்திகழ் தருந்திருவ ரங்கர்வரைமேற், கண்
டதொரு கொம்பதி லிரண்டுமக ரங்களொரு கஞ்ச
மிரு வெஞ்சிலைமணங், கொண்டதொரு கொண்ட
லிரு கெண்டையொரு தொண்டையிரு கும்பமொ
ரு செம்பணிலமே. (சஎ)

இரங்கல் - தாழிசை.

செம்பொன்னரங்கத்தரங்கநீர்ச் சீதளசந்திரவா
விசூழ், கம்புளுடன்பயி லுனைகாள் காதலையென்
சொலியாறுவேன், வெம்பனிவந்ததுவந்தபின் வே
னிலும்வந்ததுவேனில்போய்ப், பைம்புயல்வந்தது
சென்றநம் பாதகர்வந்திலர்காணுமே. (சஅ)

சம்பிரதம் - பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காணாத புதுமைபல காட்டுவன் கட்செவிக ளொ
ன்றையுமெடுத் தாட்டுவன், கடல்பருகு வன்பெ
ரிய கனகவரையைச்சிறிய கடுகினி லடைத்துவைப்
பன், வீணாவாரமு தண்டமுற விளைவிப்ப னிரவு
பகன் மாறுடுவன், விண்ணையு மறைப்பனெழு மண்
ணையு மெடுப்பனிவை விளையாடும் வித்தையென்று
ல், நீணாகணைப்பள்ளி யிற்றிருவரங்கத்து நெடிதாழி
துயிலும்பிரான், நெற்றிக்கணனவனைநான்முகனை வா
சவனை யிமிருமிரு சுடர்முதலாச், சேணாடர் யாவ
ரையு மடிமைகொண் டவரவர் சிரத்திற்பொறித்து
விட்ட, திருச்சக்கரப்பொறியி லாதவொருகடவுளை
த் தேடியினி முன்விடுவனே. (௪௯)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

முன்னமேழ்புரவியாரிரவிகாய்வெயிலினான்
முத்தரும்பியகலாமுழுமதித்திருமுகத்
தன்னமேயின்னமோர்காவதம்போதுமே
லகலுமிப்பாலையப்பாலரைக்காவதம்
என்னையாளுடையவன்றுயிலராவமளியு
மிலகுபொற்கோயிலுமிந்துவின்பொய்கையும்
புன்னைவாய்சூழலும்புரிசையும்மதுகரம்
பூவிரித்துறையுமக்காவிரித்துறையுமே. (௫௦)

கட்டளைக்கலித்துறை.

துறைமதியாமலிக் கான்யாறுநீந்திச் சுரங்கடத்த
ல், நிறைமதியாளர்க் கொழுக்கமன்றுனெடு மாலரங்
கத், திறைமதியாவரு மாராவமிர்தன்ன விந்தறுதற்,
குறைமதியாள்பொருட் டாற்கங்குல்வாரலெங் கொ
ற்றவனே. (௫௧)

மறம்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கொற்றவன்றன்றிருமுகத்தைக்கொணர்ந்ததூதா
குறையுடலுக்கோமறவர்கொம்பைக்கேட்டாய்
அற்றவர்சேர்திருவரங்கப்பெருமாடோழ
னவதரித்ததிருக்குலமென்றறியாய்போலும்
மற்றதுதான்றிருமுகமேயானாலந்த
வாய்செவிகண்மூக்கெங்கேமன்னர்மன்னன்
பெற்றவிளவரசானாலாவின்கொம்பைப்
பிறந்தகுலத்துக்கேற்கப்பேசுவாயே. (ருஉ)

இதுவுமது-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பேசவந்ததூதசெல்லெரித்தவோலைசெல்லுமோ
பெருவரங்களருளரங்கர்பின்னைகேள்வர்தாளிலே
பாசம்வைத்தமறவர்பெண்ணைநேசம்வைத்துமுன்னமே
பட்டமன்னர்பட்டதெங்கள்பதிபுகுந்துபாரடா
வாசலுக்கிடும்படல்கவித்துவந்தகவிகைமா
மகுடகோடிதினையளக்கவைத்தகாலுகாழியும்
வீசுசாமரங்குடிற்றொடுத்தகற்றைசுற்றிலும்
வேலியிட்டதவர்களிட்டவில்லும்வாளும்வேலுமே.

மடக்கு-நேரிசை வெண்பா.

வேலையுலகிற்பிறக்கும்வேலையொழிந்தோமில்லை
மாலையரங்கேசனைநாமாலையினும்—காலையினும்
உன்னிநைந்தோமில்லையுடலெடுத்தவன்றுமுதல்
என்னினைந்தோநெஞ்சேயிருந்து. (ருச)

மடக்கு-கலிநிலைத்துறை.

இரும்புவனம் விரும்புவன மணியரங்கர் பணியர
ங்க ரிமயநண்ப, வருங்கொடியின் மருங்கொடியின்
மனங்குழைக்குங் கனங்குழைக்கு மனங்கன்சாபக்,

கரும்புருவம் பொரும்புருவ முத்தநகை யொத்தநகை காந்தள்பூந்தேன், மருங்குழலுங் கருங்குழலு மூருகுவளை யிருகுவளை மழைக்கண்டாமே. (ருரு)

பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

[இதனுள் கேசாதிபாதவரை-கூஉ-அவயவங்களும் அவற்றின் உவமானங்களோடு காண்க.]

மழைபிறைசிலைவேல் வள்ளையெள்ளிலவின்
மலர்முல்லை மதிவளைகழையாழ்
வாரிசங்களிறுதத்தைவாய்கலச
மணிவடபத்திரமெறும்பூர்
அழகுநீர்த்தரங்கந்துடிசுழியரவ
மரம்பைஞெண்டிளவராலாமை
யணிதராசினைகந்துகந்துகிர்தரளம்
மம்புயமரங்கநாடனையார்
குழனுதல்புருவம்விலோசனங்காது
நாசிவாய்நகைமுகங்கண்டங்
குலவுதோண்முன்கையங்கைமெல்விரல்கள்
கூருகிர்கொங்கைகண்வயிறு
விழைதருமுரோமம்வரையிடையுந்தி
விரும்புமல்குற்றொடைமுழந்தாள்
மிஷிர்கணைக்கால்கள்புறவடிபாடு
மென்குதிவிரனகந்தானே. (ருசு)

கைக்கிளை - மருட்பா.

தாளிரண்டும்பாரொன்றுந்தார்வாடும்வேர்வாடும்
வாளிரண்டுங்காதிரண்டில்வந்திமைக்கும் - கோளிரண்டும்
ஐவகைப்பூதமமைத்தருளரங்கர்
மைவளர்சோலைமலையில்
தெய்வமல்லளித்திருவுருவினளே. (ருஎ)

ஊசல் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உருமாறிப்பலபிறப்பும்பிறந்துஞ்செத்து
மூசலாடுவதடியேனொழியும்வண்ணம்
கருமாயத்தென்னெஞ்சைப்பலகையாக்கிக்
கருணையெனும்பாசத்தைக்கயிறுப்பூட்டி
பருமாலைத்துளவசையவாடிரூசல்
மணிமகரக்குழையசையவாடிரூசல்
திருமார்புவிமாதோடாடிரூசல்
திருவரங்கராசரேயாடிரூசல். (ருஅ)

கலிநிலைத்துறை.

ஊசல்வடம்போனூர்சகடம்போலொழியாமே
நாசவுடம்போடாவிசுழன்றேநலிவேனோ
வாசவனும்போதாசனனுங்கூர்மழுவோனும்
நேசமுடன்சூழ்கோயிலரங்கநெடியோனே. (ருகூ)

தழை - கட்டளைக்கலித்துறை.

நேசத்தழைக்கு மதயானைமுன்புநின் ரேனரங்கம், பேசத்தழைக்குமென் னன்பனையாய்பெருங் கற்பகத்தின், வாசத்தழைக்கு நறுந்தழைகாணிது மந்தத்தென்றல், வீசத்தழைக்குந் தழைபோற்கெடாது விலையில்லையே. (சுo)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

விலையானதிலையென்று நீதந்தமுத்தம்
வேய்தந்தமுத்தாகில் வெற்பாவியப்பால்
இலையார்புனற்பள்ளி நாராயணன்பா
லெந்தாயரங்கா விரங்காயெனப்போய்த்
தலையாலிரக்கும்ப ணிப்பாய்சுமக்குந்
தன்றாதையவர்தாம ளைத்தாள்விளக்கும்

அலையாறுசூடும்பு ராணங்கள்பாடு
மாடும்பொடிப்பூசி யானந்தமாயே. (சுக)

தவம் - கட்டளைக்கலித்துறை.

ஆனந்தமாயரங் கற்கேயுயிர்க ளடிமையென்னும்
ஞானந்தனைலம் பொறிவாசல்சாத்திநற் றூளைப்பற்றி
ஈனந்தரும்பற்று மற்றென்றும்யானென தென்னுமபி
மானந்தவிர்ந்திருப் பார்க்கிதுபோலில்லை மாதவமே

இதுவுமது - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மாதவங்களென் றேதவங்களின் மருவுசீவனென்
றொருவநீபெரும், பூதமல்லையிந் திரியமல்லையைம்
புலனுமல்லைநற் புந்தியல்லைகாண், சீதரன்பரந் தா
மன்வாமனன் றிருவரங்கனுக் கடிமைநீயுனக், கேது
மில்லையென் றறியறிந்தபின் னிதின்மாதவ மில்லை
யெங்குமே. (சுஙு)

இரங்கல் - கட்டளைக்கலித்துறை.

எங்காந்தளங்கைநல் லீமொன்செய்கேனிரண் டே
ந்திழையார், தங்காந்தனென்றறிந் தாலுநில்லாது
தனைக்குநெய்க்கும், அங்காந்தசெம்பவ ளத்தெம்பி
ரானரங் கன்புயங்கள், செங்காந்தமால்வரை யோவி
ரும்போவென்றன் சிந்தனையே. (சுச)

களி - தாழிசை.

சிந்தையிற்குடிகொண்டிருந்து திருக்கறுத்தடி
மைக்கொளுந், திருவரங்கர்பொருப்புயர்ந்த திருப்
புயம்புகழ்களியரோம், புந்திமிக்கதுவந்துபுக்கது
போதமாதர்களெழுவர்தம், பூசையேமகபூசையெ
ன்றது புதுமையன்றிதுபுத்தர்காள், அந்தரத்திமை
யோருந்து மருந்தும்வெள்ளையதன்றியே, அரியசா

திகொளாதமானிட ரகவிடத்தினிலில்லையே, மந்
திரத்தினிலாததேவதை வானகத்தினிலில்லையே,
வடிவிலாதவையண்டகோளம் வளர்ந்தவைப்பதிலி
ல்லையே. (௬௫)

குறளடிவஞ்சிப்பா-இவை பத்தொன்பதும்
வஞ்சி அடிகள்.

இல்லறமெனத்துறவறமெனச்
சொல்லறம்பிறதுணையன்றெனப்
பவக்கடலுட்டுவக்கறுப்பான்
காவிரியிடைப்பூவிரிபொழிற்
சிலமந்திகள்சினைதாவப்
பலதெங்கின்பழக்குலையுதிர
அடர்கமுகின்மடலொடிதரத்
தேமாங்கனிசிதறுபுவிழ
முடப்பலவின்குடக்கனியுக
வரம்பைக்கனிவரம்பிற்புக
வயன்மருங்கின்மலர்ப்பொய்கையுட்
டுயில்வலம்புரிதுண்ணெனவுறத்
தாஅட்டாமரைத்தவிசுறைதரு
கூஉட்டோதிமம்பேஎட்டெனெழ
மயிற்சேவன்மனங்களிப்பக்
குயிற்பெடைக்குலமொளிப்ப
மழைமுகிலெனமுழவதிர்தரு
திருவரங்கப்பெருநகருள்
அரவணைமிசையறிதுயிலமர்ந்
தருள்புரி.

இது - ஈரடிநேரிசை ஆசிரியச்சுரிதகம்.

திருநாரணனைச்சேர்ந்தனஞ்
சரணாரவிந்தந்தஞ்சமென்றிரங்கே. (௬௬)

மடக்கு - எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இரவியையிரவின் மதியினைமதியு ளிறையினையி றையுமெண் ணரிய, கரவனைக்கரவின் முனிவனைமு னிவர் கருத்தனைக் கருத்தனைத் துடைத்தாள், பாம னைப்பாம பதத்தனைப் பதத்துட் பாரனைப் பாரதத் தூதும், அரவனையரவி னரங்கனையரங்கத் தடிகளைய டிகள்சேவியுமே. (சுஎ)

இருபனிக்காலம் - கலிநிலைத்துறை.

சேவிக்க வாழ்விக்கு மெங்கோ னரங்கன் றிருக் கோயில்சூழ், காவிற்கலந்தாசை தந்தேகி னார்நெ ஞ்சு கன்னெஞ்சமோ, வாவிப் புறத்தன்ன மேயின் ன மேதோ வரக்கண்டிலேன், பாவிக்க நேகந் தனி க்கால மிந்தப் பனிக்காலமே. (சுஅ)

குறம் - அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காலமுணர்ந்த குறத்திநான் கருதினை யொன்றது சொல்லுவேன், பாலகனுச்சியி லெண்ணெய்வார் ப ழகியதோர்கலை கொண்டுவா, கோல மலர்க்கையின் மங்கைநின் கொங்கைமுகக்குறி நன்றுகாண், ஞால முவந்திட நாளையே நண்ணுவைநம்பெருமாளையே.

மேகவிடுதூது - கட்டளைக்கலித்துறை.

பெருமாலையார்க்குறைப் பேனுமக்கேவிண்டு பேசினல்லால், கருமாலையாயெழூங் கார்க்குலங்கா டொண்டர் காற்பொடிதன், திருமாலைகொண்ட திருமாலரங்கர்தந் தெய்வத்துழாய், மருமாலைவாங் கிவம் மின்னந்திமாலை வருமுன்னமே. (எ0)

நேரிசைவெண்பா.

முன்னம்பிறந்தபிறப்போமுடிவில்லை
இன்னம்பிறப்பிக்கவெண்ணாதே—தென்னரங்கம்
மேவிக்கிடந்தானேவீற்றிருக்குநின்பதத்தென்
ஆவிக்கிடந்தானருள். (எக)

இரங்கல் - மடக்கு - அறுசீர்க்கழிநெடில்
ஆசிரியவிருத்தம்.

அரும்புன்னாகத்தடங்காவே
யவாவென்னாகத்தடங்காவே
அம்போருகக்கண்பொருந்தேனே
யழுநீருகக்கண்பொருந்தேனே
பரம்புக்கடலூர்நாவாயே
பாவிக்கடலூர்நாவாயே
பார்மீதுயரமறியலையே
படுமென்றுயரமறியலையே
கருங்கட்கயலேமாசுறவே
கனைவேற்கயலேமாசுறவே
கண்டற்போதுகுவாலுகமே
கங்குற்போதுகுவாலுகமே
குரும்பைதழைக்குங்கரும்பனையே
குயில்வந்தழைக்குங்கரும்பனையே
குருகீர்நந்தமரங்கனையே
கொணரீர்நந்தமரங்கனையே. (எஉ)

நேரிசை ஆசிரியப்பா.

இதனுள் பத்துத்தாமரைகளும் ஒன்பது
அதிசயங்களும் காண்க.

கரைபொருதொழுகுங் காவிரியாறே
ஆற்றிடைக்கிடப்பதோ ரரங்கலையரவே

அரவஞ்சுமப்பதோ ரஞ்சனமலையே
அம்மலைபூத்ததோ ரரவிந்தவனமே
அரவிந்தமலர்தொறு மதிசயமுளவே
கடல்விளிம்புடுத்த கண்ணகன்ஞாலம்
உடன்முழுதளந்த தொருதாமரையே
வகிரிளம்பிறையான் வார்சடைதேங்கப்
பகீரதிகான்றதோர் பங்கேருகமே
யாவையும்யாரையும் படைக்கநான்முகக்
கோவையீன்றதோர் கோகனகமே
திருமகட்கினிய திருமனையாகிப்
பருமணியிமைப்பதோர் பதுமமலரே
சடைத்தலைதாழ்த்துச் சங்கரனிரப்ப
முடைத்தலைதவிர்த்ததோர் முளரிமாமலரே
ஆங்குமண்டோதரி யணிந்தமங்கலநாண்
வாங்கவில்வாங்கிய வனசமுமொன்றே
விரிந்தபுகழிலங்கை வேந்தற்குத்தென்றிசை
புரிந்தருண்மலர்ந்ததோர் புண்டரீகமே
மண்டிணிஞாலமு வானமுமுட்பட
அண்டமுண்டுமிழ்ந்ததோ ரம்போருகமே
கடைசிவந்தகன்று கருமணிவிளங்கி
யிடைசிலவரிபரந்தினியவாய்நெடியவாய்
இன்பந்தழீஇய விருபெருங்கமலம்
துன்பந்தழீஇய தொண்டனேனையும்
உவப்புடனொருகானோக்கிப்
பவக்கடல்கடக்கும் பரிசுபண்ணினவே. (எக)

கார்காலம்-வண்டு-கலிநிலைத்துறை.

பண்கொண்ட வேயூது செவ்வா யரங்கேசர் பை
ம்பொன்னிநாட், டெண்கொண்ட பேராசை தந்
தார் மறந்தார்கொ லிசைவண்டுகாள், விண்கொண்

டமலைமீது விண்மாரி பொழிகின்ற விசைபோலவெ
ன், கண்கொண்ட முலைமீது கண்மாரி பொழிகின்ற
கார்காலமே. (எச)

கைக்கிளை-கட்டளைக்கலித்துறை.

காரகமோநம் வடதிருவேங்கடக் கார்வரையோ
நீரகமோநெடு வானகமோதுயி னீடுபணிப் [னும்
போகமோதென் றிருவரங்கப்பெருங் கோயிலென்
ஊரகமோவிடந் தண்காவினின்ற வொருவருக்கே.

வஞ்சித்துறை.

ஒருநயம்பேசுவன்-றிருவரங்கேசர்தாள்
மருவுமின்னுசமாங்-கருமவன்பாசமே. (எசு)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாசமாமடியர்[illegible]னேசமாமடிகளும்
பைம்பொனூராடையுஞ்செம்பொன்மாமேனியும்
ஆசையாமலருளாள்வாசமார்பகலமு
மஞ்சலென்றருள்செயுங்கஞ்சமுங்கருணையின்
தேசுலாவதனமும்மாசிலாமுறுவலுஞ்
சீரிதாயெழுதுகத்தூரிநாமமுமெனக்
கீசனூர்திருவரங்கேசனூர்திகிரியு
மிலகுவெண்சங்குமேயுலகமெங்கெங்குமே. ()

வஞ்சிவிருத்தம்.

எங்கணுநிறைந்துறையுமெம்பிரான்
கொங்கணுகிவண்டுமுரல்கோயில்சூழ்
உங்கள்வரையெங்கள்வரையொன்றியே
மங்கையுனகொங்கைகளைமானுமே. (எ௭)

இரங்கல் - கலிநிலைத்துறை.

மானூர்கேசன்மேலார்மாலார்வாழ்கோயில்
தேனூர்காவிற்பூவாராயுந்தேனேபோல்

நாறுபோகத்தின்பங்கண்டார்நான்வாடப்
போனார்வாராதேதோவோதாய்போதாவே. (எகூ)

மதங்கு - அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

போதவெனக்கெளிதானார்போதவனுக்கரிதானார்
நாதாரங்கர்திருத்தாளடியரங்கினடக்கின்
ஓதுமதங்கிநடித்தாலுள்ளமதங்கியரக்காம்
வேதமறைந்திடவல்லீர்விளையமறைந்துவிடீரே. ()

பாண் - தாழிசை.

விடாதுழூமடந்தைமார்விரும்பவாயர்மாதர்தோள்
வியந்துமுன்னயந்தவர்க்குவிற்குமெங்கைகொங்கைதான்
அடாததன்றுபாணவின்னமங்கனன்றியிங்கனம்
மரங்கரன்புகூரவின்பமாகவல்லவல்லவே
எடாதிருக்கின்வாய்திறக்குமெங்களையனுச்சிதோ
யெண்ணெய்பட்டமெய்யிலிட்டமுத்துமுந்தரீயமும்
படாமுகந்திறந்தசைந்துமழலைவாயின்மணமறுப
பசுநரம்புபுடைபரந்துபால்சுரந்தமுலையுமே. ()

இரங்கல் - கட்டளைக்கலித்துறை.

முலைகொண்டபான்மணம் வாய்மாறிற் றில்லையம் மொய்குழலோ, அலைகொண்டதின்னமென் கையணையேயலை யாழிவற்றச், சிலைகொண்டசெங்கை யரங்கேசர்தாள்கொண்ட தேசமெல்லாம், விலைகொண்டவாள்விழி யாள்சென்றவாறெங்ஙன் வெஞ்சுரமே.

இரங்கல் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வெஞ்சமங்கருதுங்கஞ்சனுமெருதும்
வேழமும்பரியும்வீழமுன்பொருதார்
தஞ்சமென்றவருக்கஞ்சலென்றருளுந்
தாயிலன்புடையார்கோயிலின்புடையார்

மஞ்சுவண்டினமுந்துஞ்சுதண்டலைவாய்
வல்லியொன்றதிலேயெல்லியுந்திகழுங்
கஞ்சமுண்டதிலேநஞ்சமுண்டதிலே
கள்ளமுண்டதுவென்னுள்ளமுண்டதுவே. ()

முதுவேனிற்காலம் - எண்சீர்க்கழிநெடில்
ஆசிரியவிருத்தம்.

உண்டுமிழ்வாசமுடன்றண்டலைமாருதம்வந்
துலவியசாளரமுங்குலவியவாணிலவும்
விண்டலர்பூவணையும்மென்பனிநீர்புழுகும்
மேனியிலும்முதிராவேனிலுமாகியவால்
அண்டர்தொழும்பெருமாளம்புயமின்பெருமா
ளருமறையின்பெருமாளழகியநம்பெருமாள்
புண்டரிகங்கமழுந்தண்டுறையோதிமமே
புன்னைகள்சிந்தலரேயின்னமும்வந்திலரே. ()

கூதிர்காலம் - வேற்றொலிவெண்டுறை.

இன்னிசைவேயினர் மன்னியகோயிலை யெய்தார்
போல், பொன்னினைவாலவர் போனவிடத்தினிற்
போகாதோ, மின்னியமுகிற்றுளி யென்றென் மே
லெலாம், வன்னியின்பொறிகளை வழங்கும் வாடை
யே. (அரு)

கார்காலம் - அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வாடையாயிரு பனியுமாய்வேனிலாய் வந்ததுகா
ரொன்றே, பேடைமாமயிற் சாயலாயன்பர்மேற் பி
ழைகருதிடல் செம்பொன், ஆடைநாயகன் றிருமக
ணாயக னரங்கநாயகனேறும், ஓடைமாவிது மதயிது
பிளிறிய வொலியிது மழையன்றே. (அசு)

கட்டளைக் கலித்துறை.

மழைபோன்மரகதம் போலெம்பிரான்வளர் கோயிலன்னீர், பிழைபோமிவர்க்கிதை யாருரைப்பாரிவர் பின்வந்தெய்த, தழைபோயுறைத்த வருத்தம்பொறாமைகொல் சங்கரன்பால், உழைபோயொதுங்க முயல்போய்மதிபுக் கொளித்ததுவே. (அ௭)

கார்காலம் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒளிக்குமிரு சுடர்க்கவளம் விழுங்கும் பேழ்வாயுருமுழக்கத் திந்திரவி லோடை நெற்றித், துளிக்குமழை மதக்கொண்மூக் களிற்றைமின்னற் றோட்டிமாருதப்பாகர் தூரக்குங்காலம், அளிக்குலமுங் களிக்குமயிற் குலமும்பாடி யாடு பொழிற் றிருவரங்க ரணையாக்காலம், விளிக்குமலைக் கருங்கடலு மொறுக்குங்காலம் வினையேற்கு விழிகடுயின் மேவாக் காலம். (அஅ)

இளவேனிற்காலம் - கலிநிலைத்துறை.

மேவலர்வாழ் தென்னிலங்கை மலங்கவொரு காலிருகால் விற்குனித்தெய், ஏவலர்வாழ் திருவரங்கத் தெமையிருத்திப் போனவர்நாட் டில்லை போலு, கோவலர்வாய்க் குழலோசைக் காணிணைகள் செவியேற்குங் குறும்புன்மாலைப், பூவலரின் மணம்பரப்பி யிளவேனில் வரவந்த பொதியத்தென்றல்,

இரங்கல் - கட்டளைக்கலித்துறை.

தென்றலைக்குங்குமச் சேற்றைப்பொருள்சிறி யாள்பெரிய, குன்றலைக்குந்துடிக் கும்மென்செய்வாடிய ராலழைத்த, வன்றலைக்குஞ்சரங் காத்தாயிலங்கை மலங்கவளைத், தன்றலைக்குஞ்சரந் தாயரங்காவண் டராதிபனே. (௯௦)

### கட்டளைக் கலிப்பா.

அண்டர்போற்றுந்திருவரங்கேசனா
ரணியரங்கத்திருமுற்றமெய்தினால்
பண்டுபோனவளையாழிவாங்குவேன்
பாவியாதுபராமுகம்பண்ணினால்
தண்டும்வாளுஞ்சிலையுமிருக்கவே
சங்குமாழியுந்தாருமென்பேனவை
தொண்டருக்கொற்றிவைத்தோமென்றாரேதிற்
றுளவமாலையைத்தொட்டுப்பறிப்பனே. (௯௧)

### கலிநிலைத்துறை.

தொட்டுண்ட தயிர்வெண்ணெய்க் கன்றாய்ச்சி யுரலோடுசூழ்ந்துகட்டக், கட்டுண்டு கழலவிரகறியாமலிருந்தழுதகள்வன்யாரோ, கட்டுண்டானரங்கனெனக் கட்டுரைப்பாரானாலுங் கங்கைசூடி, மட்டுண்ட கொன்றையான்மலர்மேலா னறிவரியவடிவனன்றே.

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வடியாத பவக்கடலும் வடிந்துமூல மாயைகடந்தப்பாற்போய் வைகுந்தஞ்சேர்ந், தடியார்கள் குழாங்கூடி யுனதடிக்கீ ழடிமைசெயு மக்கால மெக்காலந்தான், கொடியாடு மணிமாட வயோத்திமூதூர் குடிதுறந்து திருவரங்கங் கோயில்கொண்ட, நெடியோனே யடியேனான் முயற்சியின்றி நின்னருளே பார்த்திருப்ப னீசனேனே. (௯௩)

### கட்டளைக் கலித்துறை.

நீசச்சமணர்க்குஞ் சூனியவாதர்க்கு நீதியற்ற, பூசற்பௌத்தர்க்குஞ் சைவர்க்கும்யார்க்கும் புகலுகின்றேன், நாசப்படாவுயி ரெல்லாமுதற்றந்த நாதன்கண்டீர், ஆசற்றசீரரங் கத்தாதிமூலத் தரும்பொருளே. (௯௪)

நேரிசை வெண்பா.

அருட்புண்டரீகத்தடியிணைக்கென்னெஞ்சம்
இருட்புண்டரீகமென்றோ — விரும்பி
அமர்ந்திருந்துங்கோயிலரங்கா வுனைநான்
மறந்திருந்துமேற்பிறவாமல். (௪௫)

கலிவிருத்தம்.

பிறவியெனுங் கடலழுந்திப் பிணிபசியோடிங்கிரி
யச், சிறுவனுங்கக் கொடுவினையின் சுழலகப்பட்டுழ
ல்வேனை, அறமுடையா யென்னப்பா வரங்காவெ
ன்றுருகிருக், குறவுடையா யடியேனை யுயக்கொள்
வதாருநாளே. (௪௬)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒருபொருளல்லேனிருவினையுடையே
னுனதுதொண்டெனுந்துறைகுளித்துன்
பெருகுதண்ணளியின்பாசந்தொட்டிழிந்து
பெரியதோர்முத்தியான்பெற்றேன்
திருவுமாமணியுஞ்சங்குமேந்திச்
செய்யதாமரைபலபூத்துக்
கருநிறமுடைத்தாய்நதிபொருதரங்கங்
கலந்ததோர்கருணைவாரிதியே. (௪௭)

கட்டளைக்கலித்துறை.

வாரியரங்கம்வருதிருப்பாவைக்குமண்மகட்கும்
சீரியரங்கனவா திருக்கோலமுந்தென்றிருக்கா
வேரியரங்கவிமானமுங்கோயிலுமேவித்தொழார்
பூரியரங்கவர்கண்ணிரண்டாவதுபுண்ணிரண்டே ( )

நேரிசைவெண்பா.

புண்ணுருடற்பிறவிபோதுமெனக்குமுளைக்கும்
எண்ணுறிருந்தினிப்போதும்—கண்ணு

குழற்காளாய்தென்னரங்கக்கோயிலாய்நின்பொற்
கழற்காளாய்நின்றேனைக்கா (௯௯)

கலிநிலைத்துறை.

காவிரிவாய்ப் பாம்பணைமேற் கருமுகில்போற் க
ண்வளருங் கருணைவள்ளல், பூவிரியுந் துழாயரங்கர்
பொன்னடியே தஞ்சமெனப் பொருந்திவாழ்வார்,
யாவரினு மிழிகுலத்தோ ராயினுமவர்கண்டீ ரிமை
யாநாட்டத், தேவரினு முனிவரினுஞ் சிவனயனெ
ன்றிருவரினுஞ் சீரியோரே (௧௦௦)

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மழைமுகிலெனவே பணாமுகந்திகழ்
வரியரவணைமேறிவாழரங்காநும
எழில்பெறுதிருத்தாளின்மேலகலம்பக
மெனுமொருதமிழ்மாலைதானணிந்தனன்
குழலிசையளிமேவுகூடம்வந்தருள்
குருபரனிருபாதபோதுடைந்தவன்
அழகியமணவாளதாசனென்பவ
னாழ்வாரடிசூடிவாழுமன்பனே (௧௦௧)

திருவரங்கக்கலம்பகம்

முற்றிற்று.

சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு

திவ்வியகவி - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அருளிச்செய்த

# திருவரங்கக் கலம்பகம்



Pub No : 884
ISBN : 978-93-85165-39-9
திருவரங்கக் கலம்பகம் 30.00